# தமிழ்நாடு தட்டச்சு - கணினி பள்ளிகள் சங்கம்
# TAMILNADU TYPEWRITING - COMPUTER INSTITUTES' ASSOCIATION
(Regd. No : 43/2016)

Regd. Office : # 555/18, Gandhi Road, (Ist Floor), Kanchipuram - 631 501.
Communication Address : #M.61. TNHB Qtrs,Complex, Kanchipuram - 631502
web : www.tntcia.com

L. SENTHIL, B.C.A.,D.C.P.,T.T.C., State President, CELL : 9443082572
J. BARATHAMANI, T.T.C., State General Secretary, CELL : 9003489826
L. MANOHARAN, T.T.C., State Treasurer, CELL : 9442883275
V. KALAIVANAN, B.COM, M.A, PGDCA., Vice Presedent
M. DURAIPANDI, B.A, T.T.C., Joint Secretary
A.M. SATHYAN Vice President
V. CHANDIRASEKARAN, M.A, M.COM, B.ED., Joint Secretary
M. KARTHIKEYAN, M.COM, M.PHIL, M.A, D.L.L, A.L., Founder Adviser
D.A. DHARMARAJ, B.A., Honorary President


02.06.2019

அன்புடையீர்,

வணக்கம். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு வரை தட்டச்சுப் பயிலகம் நடத்தி வந்தவர்கள் குறைவான மாணவர்கள் வருகையினால் வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டு வாழ்க்கையை நடத்துவதற்கு மிகவும் சிரமப்பட்டதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள். கடந்த 5 ஆண்டுகளாக மாணவர்கள் வருகை படிப்படியாக உயர்ந்து வரும் சூழ்நிலையில் அரசு அலுவலகங்களுக்கு தேவைப்படும் தட்டச்சர்களையும் சுருக்கெழுத்தர்களையும் உருவாக்கித் தரும் மகத்தான கல்விப் பணி செய்து வரும் நம்மில் சிலர் தவறான காரியங்களில் ஈடுபடுவது குறித்து கவனத்திற்கு வரப்பெற்றுள்ளது. சமீபத்தில் வெளியான நக்கீரன் செய்தி மற்றும் தினமலர் நாளிதழில் வாசகர் கருத்து பகுதியில் வெளியான செய்தி மிகவும் வருந்தத் தக்க விஷயமாகும்.

ஒரு சிலர் செய்கின்ற தவறுகளினால் ஒட்டுமொத்த நமது தட்டச்சுப் பள்ளிகள் குடும்பத்திற்கு அவப் பெயர் ஏற்படுகிறது. கல்வியில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து தரமான தகுதியான தட்டச்சர்களையும் சுருக்கெழுத்தர்களையும் கணினி இயக்குபவர்களையும் உருவாக்க வேண்டியது நமது தலையாய கடமை என்பதை நம்மில் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

தவறு செய்பவர்களை தொழில்நுட்பக் கல்வி வாரியம் தண்டிப்பதை தவிர்த்திட வேண்டுமானால், நேர்மையுடனும் ஒழுக்கமுடனும் நடந்து கொள்ளவேண்டியது அனைவரின் கடமையாகும்.

பயிலக வாடகை, மின்சாரக் கட்டணம், ஆசிரியர் சம்பளம், தட்டச்சுப் பொறிகள் உதிரி பாகங்கள் விலை ஏற்றம் இவை எல்லாம் நமது வருவாயில் பாதிக்கும் மேல் செலவாகிட வழியாகிறது. நமது தொழிலில் இருந்த பலர்

நஷ்டத்திற்கும் கஷ்டத்திற்கும் உள்ளாகி மாற்றுத் தொழிலுக்குச் சென்றபோதிலும், ஊசலாடிக் கொண்டிருந்த சிலர் தற்போது பிழைத்துக் கொண்டிருக்கும் நிலையை மறந்துவிடக் கூடாது.

அரசு அலுவலகங்களுக்கு தட்டச்சர்களும் சுருக்கெழுத்தர்களும் கணினி இயக்குபவர்களும் முதுகெலும்பு போன்றவர்கள். அத்தகையவர்களை உருவாக்கித் தரும் நாம் கடமை கண்ணியம் கட்டுப்பாடு காத்து தவறுகளுக்கு இடம் தராமல் செவ்வனே பணியாற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்.

பெறுதல்
அனைத்து உறுப்பினர்கள்.

நகல் சமர்ப்பணம் - உயர்மிகு கூடுதல் இயக்குநர் அவர்கள், (தேர்வுகள்)
தொழில்நுட்பக் கல்வி வாரியம், சென்னை.25 தகவலுக்காக
சமர்ப்பிக்கப்படுகிறது.